50

பாரதியார்

கவிதைகள்

"குயில்"

O-,1MSU,K
NSS
108952

குயில்

அமரகவி சுப்ரமணிய பாரதியார்.

" பெற்ற தாயும் பிறந்த பொன்னுடும்
நற்றவ வானிலும் நனி சிறந்தனவே. "

பாரதி புத்தக நிலையம்,

மதுரை.

11—9—55] ❊ [0—8—0

குயில்

பதிப்புரை

எளிய பதங்கள், எளிய நடை, மக்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலம் செய்து தருவோன் தமிழுக்குப் புத்துயிர் தருவோனாகிறான் என்பதாக "பாஞ்சாலி சபதம்" என்னும் காவியத்திற்கு முன்னுரையில் பாரதியார் குறிப்பிட்டார். இந்த நோக்கத்தை எழுத்துக்கு எழுத்து பூர்த்திசெய்தார் பாரதியார். அவருடைய ஒவ்வொரு பாடலும் ஒவ்வொரு விதத்தில் எழுச்சியையோ, புரட்சியையோ அல்லது கிளர்ச்சியையோ ஏற்படுத்தத் தவறவில்லை. கவிதைகளில் மட்டுமல்ல; வசன நடையிலும், கருத்துக்களிலும் இந்த இலட்சணமுண்டு.

பாரதியாருக்கு பெயரையும் புகழையும் தேடித் தந்தவை (மறைவிற்குப் பின்னர்தான்!) என்னவோ தேசிய கீதங்கள்தான் என்றாலும் அவரை உலகக் கவிஞர்கள் வரிசையில் சேர்ப்பவை அவருடைய முப்பெருங் காவியங்களான பாஞ்சாலி சபதம், குயில், கண்ணன் பாட்டு இவைதான். இவற்றுள் நடுநாயகமாய் குயிலைக் குறிப்பிடுகிறோம். கற்பனை நயத்திலும் சொல் லின்பத்திலும் இணையற்றகாவியம் இது. "பட்டப்பகலிலே பாவலர்க்குத் தோன்றும் நெட்டைக்கனவின் நிகழ்ச்சி".

ஏனைய கவிஞர்களைப் போலப் பாரதி என்னும் கவிக்

குயில் குக்குவென்று ஒரே குரலில் கூவவில்லை. தேவைக்குத் தகுந்தபடி எல்லாம் குரலை மாற்றிக் கொண்டது. நெருப்பைக் கக்கவேண்டிய இடத்தில் நெருப்பையே கக்கியது. தேனைச் சொரிய வேண்டிய தருவாயில் தீந்தமிழ்த் தேனைப் பொழிந்தது. விந்தைச் சுவையெல்லாம் கூட்டிச் சிந்தையை மகிழ்விக்கும் செந்தமிழ்க் காவியம் "குயில்". இதைப்படித்து முடித்த பின்னர் எஞ்சி நிற்பது வியப்பு; பெருவியப்பு!

தூங்கிக் கிடந்த தமிழரைக் கூவி எழுப்பிய மகா கவிஞரின் சிருஷ்டிகளுள் குயிலை எமது முதல் வெளியீடாகப் பதிப்பிப்பதில் நாம் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். பேரழகு வாய்ந்த இந்தக் காவியத்தை எங்களால் இயன்றவரை கவர்ச்சிமிக்க பதிப்பாக வெளியிட்டிருக்கிறோம்.

காவிய நயத்தைப் பற்றியும் ஒரு சில வார்த்தைகள்; காவிய நிகழ்ச்சிகள் நடைபெறும் மாஞ்சோலை செந்தமிழ்த் தென்புதுவைத் திருநகரில் சிறு தொலைவில் மேவுகிறது. அந்தத் திருநகர்

"காலை யிளம்பரிதி வீசுங் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாஞ் சோதி பொருந்தி முறைதவறு
வேகத் திரைகளினால் வேதப் பொருள்பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய"

புதுச்சேரி. இத்தகைய எழில்சேர் சூழ்நிலையில் பேடைக் குயில் ஒன்று பெட்புறவோர் வான்கிளையில் வீற்றிருந்து இன்னமுதைக் காற்றினிடை எங்கும் கலந்து இன்னிசைத் தீப்பாடல் இசைத்தது. அந்தப் பாடலின் சூத்திரம்

"காதல், காதல், காதல்
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்"

என்பதுதான். நாதத்திற்கு நலிவோ, தாளத்திற்குத் தடையோ, உறுதிக்கு உடைவோ, இல்லாத காதல் காவியம் "குயில்" இவ்வாறு தொடங்குகிறது.

எளிய இனிய இக்காவியத்தின் கதையைத் தொடர்ச்சியாகச் சொல்வதோ, காவியத்தை விமர்சனம் செய்வதோ இப்பதிப்புரையின் நோக்கமன்று. என்றாலும் நாம் இக்காவியத்தில் மிகவும் ரசிக்கவேண்டிய இடங்களைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இது தேவையில்லைதான் என்றாலும் நம் கடமை.

"நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே யுதிக்கு மிசையினிலும்
....
"ஏற்ற நீர்ப் பாட்டி னிசையினிலும்"

"வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள்தா மொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்"

நெஞ்சைப் பறிகொடுத்தேன்.

"மேனி யழகினிலும், விண்டுரைக்கும் வார்த்தையிலும்
கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே
வானரர்தஞ் சாதிக்கு மாந்தர்நிக ராவாரோ?"

குரங்கின் பெருமை இவ்வாருக

"மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்
கூனர்தமை ஊர்களிலே கொண்டு விடுவதற்கும்"

தெய்வமென மாடு உதவுகிறது. இந்தக் கற்பனைகளில் குமிழியிடும் நகைச்சுவைதான் என்ன? நையாண்டிதான் என்ன?

"படைப்புக் கடவுளே! பண்டேயுலகு படைத்தாய்; நீரைப் படைத்து, நிலத்தைத் திரட்டி, காற்றை ஊதி காணறிய வானவெளி தோற்றுவித்த நின் தொழில் வலிமை என்ன! காலம் படைத்து, கடப்பதில்லாத் திக்கமைத்து ஞாலத்தில் நாள்தோறும் தோன்றி மறையும் உயிர்கள் பல படைத்த சாதனைகள் மிகப்பெரிது. என்ருலும் இந்த "அதிசயங்கள் யாவினுமே காணுமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா!"

"காட்டு நெடு வானங்கடலெல்லாம் விந்தையெனில்" பாரதியின் "பாட்டினைப் போலாச்சரியம் பாரின்மிசை இல்லையடா!" "ஆசைதரும் கோடி யதிசயங்கள் கண்டதிலே ஓசைதரும் இன்பம் உவமையில்லா இன்பம்" என்னும் வாக்கில்தான் எத்தகைய உண்மை ஒளிவிடுகிறது.

குயில் தனது பூர்வஜன்மக் கதையைக் கூறுகிறது. பொன்னை, மலரைப் புதுத்தேனைக் கொண்டு நித்தம்

கொடுத்த மாடனை—மாமன் மகனை—மாலையிட வாக்களித்தாள் குயிலி. மையலினால் இல்லை; கருணையினால். ஆனால் செல்வமும் வீரமுமுடைய மொட்டைப்புலியனின் மூத்த மகன் நெட்டைக்குரங்கனுக்கு குயிலியை மணம் புரிவிக்க நிச்சயித்து மண நாளும் குறிப்பிட்டுவிட்டான் தந்தை. அது கேட்டு மாடன் மனம் பதைத்தான். அவனைப் பெண் குயிலி தேற்றினாள். மூன்றே மாதத்தில் நெட்டைக் குரங்கனை விவாகரத்து செய்துவிட்டு உன்னிடமே வந்து விடுவேன் என்று வாக்களித்தாள்.

பின்னொரு நாள் காட்டில் குயிலியும் தோழியரும் ஆடுவதை மன்னன் மகன் ஒருவன் கண்டான்.

நின்னையவன் நோக்கினான்; நீயவனை நோக்கி நின்றாய்;
அன்னதொரு நோக்கிலே ஆவி கலந்துவிட்டீர்.

மன்னன் குயிலியை மணப்பதாகக் கூறினான். குயிலி என்ன பதில் சொன்னாள் தெரியுமா? பாரதியின் கதாநாயகி என்ன சொல்ல முடியுமோ அதையே சொன்னாள். வீரவுணர்வுடன், மண்டு பெருங்காதல் மனதடக்கி

"பத்தினியா வாழ்வதல்லால் பார்வேந்தர் தாமெனினும்
நத்தி விலைமகளா நாங்கள் குடிப்போவதில்லை"

குயிலியின் காதலை விழிக்குறிப்பினாலறிந்த மன்னன் பளிச்சென்று நெருங்கிக் கன்னஞ் சிவக்க முத்தமிட்டான். "பொன்னே, ஒளிர்மணியே, புத்தமுதே நீயே மனையாட்டி, நீயே அரசாணி" என்றான்.

மன்னவனும் குயிலியும் ஆரத்தழுவி நின்றார்.

மாடனும், குரங்கனும் மலைக்கு வந்து இக் காட்சியைக் கண்டனர். இதைக் கவி சித்தரிக்கிறார்:

"ஆவிக் கலப்பி னமுதச் சுகந்தனிலே
மேவியங்கு மூடி யிருந்த விழி நான்கு;
ஆங்கவற்றைக் கண்டமையால் ஆவியிலே தீப்பற்றி
ஓங்கும் பொறிக ளுதிர்க்கும் விழி நான்கு;

எத்தகைய அழகான சித்திரம். இதைக் கண் முன்பு கற்பனைசெய்து பார்த்தாலே இதன் அழகு பூர்ணமாக விளங்கும்.

மாடன், குரங்கன், மன்னன் மூவரும் வாள் வீச்சில் உயிரிழந்தனர். மறுபிறப்பில் குயிலியை மணம் புரிவதாக மன்னன் வாக்களித்தான்.

மறுபிறப்பில் குயிலி, குயிலாகவும், நெட்டைக் குரங்கன் குரங்காகவும், மாடன் மாடாகவும் மன்னன் கவிஞனாகவும் தோன்றினர்.

முடிவில் கவிஞன் குயிலை முத்தமிட்டான். குயிலுக்குப் பதில் பெண்ணொருத்தி நின்றாள். எப்படிப்பட்ட பெண்?

விண்டுரைக்க மாட்டாத விந்தையடா' விந்தையடா!
ஆசைக் கடலின் அமுதமடா! அற்புதத்தின்
தேசமடா! பெண்மைதான் தெய்விகமாங் காட்சியடா!

இவ்வாறாகப் பட்டப் பகலில் பாவலர்க்குத் தோன்றும் நெட்டைக் கனவு முடிகிறது.

இந்த வெளியீட்டை மிகவும் பெருமையுடன் தமிழ் மக்களுக்குச் சமர்ப்பிக்கிறோம். இதைச்சாத்தியமாக்கியது அரசாங்கத்தின் முயற்சி. எக்காரியத்தையும் செய்து முடிக்காதவரை குறைகூற எவ்வளவோ நபர்கள் தயார்தான்; மிகவும் எளிதான காரியம்கூட. இந்தியா போன்ற ஜனநாயக நாட்டில் அரசாங்கத்தைக் குறை கூறுவதைவிட சுலபமான காரியம் வேறு எதுவும் இருப்பதாகத் தோன்றவில்லை.

பாரதியாரின் பாடல்கள் தனி நபர் உரிமையாக இருந்தவரை, அரசாங்கம் அந்த உரிமையை மாற்றி இந்தப் புரட்சிக் கவிஞரின் பாடல்களை பொதுவுடமையாக்கவில்லையே என்று எல்லோரும் கூச்சலிட்டனர்; சர்க்காரைத் தூற்றினர். சாதனை முடிந்தபின்னர் கூச்சலிட்டவர்களுக்கு அந்தச் சிந்தனையே அற்றுப்போய் விட்டது.

பாரதியின் பாடல்களை நாட்டின் பொது நிதியாக்கியதற்கு சென்னை அரசாங்கத்தை மனப்பூர்வமாகத் தமிழ் மக்கள் சார்பாக நாம் பாராட்டுகிறோம். எம் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஒப்புயர்வற்ற "குயில்" இங்கிலையத்தின் முதல் "பாரதி மலர்" ஆக வெளிவருவதைச் சாத்தியமாக்கிய சென்னை அரசாங்கத்திற்கு மறுபடியும் நன்றி.

பாரதியாருடைய ஆசை தம் பாட்டுக்களுக்கு உயர்ந்த சித்திரங்கள், விளக்கங்களுடன் சிறந்த பதிப்புக்களாக வரவேண்டும் என்பது.

திருத்தமான, சுத்தமான, கவர்ச்சியான பதிப்பாக இதை வெளியிட முயன்றிருக்கிறோம். இதைத் தமிழர்கள் வரவேற்று ஆதரிப்பதைப் பொறுத்து மற்ற பாரதி மலர்களை இன்னும் உயர்ந்த பதிப்புக்களாக வெளியிட எண்ணியுள்ளோம்.

உங்களின் ஆதரவு இன்றுபோல் என்றும் என்றும் இருக்க வேண்டுகின்றேன்.

து. தேசிகன்

1

குயில்

காலை யிளம்பரிதி வீசுங் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்
மோகனமாஞ் சோதி பொருந்தி முறை தவறு
வேகத் திரைகளினல் வேதப் பொருள் பாடி
வந்து தழுவும் வளஞ்சார் கரையுடைய
செந்தமிழ்த் தென்புதுவை யென்னுந் திருநகரின்
மேற்கே, சிறுதொலையில் மேவுமொரு மாஞ்சோலை;
நாற்கோணத் துள்ள பல நத்தத்து வேடர்களும்
வந்து பறவை சுட வாய்ந்த பெருஞ்சோலை;—
அந்த மாஞ்சோலை யதனிலோர் காலையிலே,
வேடர் வாராத விருந்துத் திருநாளில்,
பேடைக் குயிலொன்று பெட்புறவோர் வான்கிளையில்
வீற்றிருந்தே, ஆண்குயில்கள் மேனி புளகமுற,
ஆற்ற லழிவுபெற, உள்ளத் தனல் பெருக,
சோலைப் பறவையெலாஞ் சூழ்ந்து பரவசமாய்க்
காலைக் கடனிற் கருத்தின்றிக் கேட்டிருக்க,
இன்னமுதைக் காற்றினிடை எங்குங் கலந்ததுபோல்,
மின்னற் சுவைதான் மெலிதாய் மிக வினிதாய்
வந்து பரவுதல் போல், வானத்து மோகினியாள்

இந்தவுரு வெய்தித் தன் ஏற்றம் விளக்குதல்போல்,
இன்னிசைத் தீம்பாட லிசைத்திருக்கும் விந்தைதனை
முன்னிக் கவிதைவெறி மூண்டே நனவழியப்
பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம்
நெட்டைக் கனவி னிகழ்ச்சியிலே கண்டேன் யான்.
கன்னிக் குயிலன்று காவிடத்தே, பாடியதோர்
இன்னிசைப் பாட்டினிலே யானும் பரவசமாய்,
"மனிதவுரு நீங்கிக் குயிலுருவம் வாராதோ?
இனிதிக் குயிற்பேட்டை யென்றும் பிரியாமல்,
காதலித்துக் கூடிக் களியுடனே வாழோமோ?
நாதக் கனலிலே நம்முயிரைப் போக்கோமோ?"
என்று பல வெண்ணி ஏக்கமுறப் பாடிற்றால்.
அன்று நான் கேட்ட தமரர் தாங் கேட்பாரோ?
குக்குக்கு வென்று குயில் பாடும் பாட்டினிலே
தொக்க பொருளெல்லாந் தோன்றிய தென்சிந்தைக்கே;
அந்தப் பொருளை அவனிக் குரைத்திடுவேன்;
விந்தைக் குரலுக்கு, மேதினியீர், என் செய்கேன்!

2

குயிலின் பாட்டு

ராகம்—சங்கராபரணம். ஏக—தாளம்.
ஸ்வரம்:

"ஸகா—ரிமா—காரீ
பாபாபாபா—மாமாமாமா
ரீகா—ரிகமா—மாமா"

[சந்த பேதங்களுக்குத் தக்கபடி மாற்றிக்கொள்க]

காதல், காதல், காதல்,
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல் (காதல்)

1. அருளே யாநல் லொளியே;
ஒளி போமாயின், ஒளி போமாயின்,
இருளே, இருளே, இருளே. (சாதல்)

2. இன்பம், இன்பம், இன்பம்;
இன்பத் திற்கோ ரெல்லை காணில்,
துன்பம், துன்பம், துன்பம். (காதல்)

3. நாதம், நாதம், நாதம்;
நாதத் தேயோர் நலிவுண்டாயின்,
சேதம், சேதம், சேதம். (காதல்)

4. தாளம், தாளம், தாளம்;
தாளத் திற்கோர் தடையுண்டாயின்,
கூளம், கூளம், கூளம். (காதல்)

5. பண்ணே, பண்ணே, பண்ணே,
பண்ணிற் கேயோர் பழுதுண்டாயின்,
மண்ணே, மண்ணே, மண்ணே. (காதல்)

6. புகழே, புகழே, புகழே;
புகழுக் கேயோர் புரையுண்டாயின்,
இகழே, இகழே, இகழே. (காதல்)

7. உறுதி, உறுதி, உறுதி;
உறுதிக் கேயோர் உடைவுண்டாயின்,
இறுதி, இறுதி, இறுதி; (காதல்)

8. கூடல், கூடல், கூடல்;
கூடிப் பின்னே குமரன் போயில்,
வாடல், வாடல், வாடல். (காதல்)

9. குழலே, குழலே, குழலே;
குழலிற் கீறல் கூடுங்காலே,
விழலே, விழலே, விழலே. (காதல்)

3

குயிலின் காதற் கதை

மோகனப் பாட்டு முடிவுபெறப் பாரெங்கும்
ஏக மவுன மியன்றதுகாண்; மற்றதிலோர்
இன்ப வெறியுந் துயரும் இணைந்தனவால்.
பின்பு நான் பார்க்கப் பெடைக்குயிலஃ தொன்றல்லால்
மற்றப் பறவை மறைந்தெங்கோ போகவுமிவ்
வொற்றைக் குயில் சோகமுற்றுத் தலைகுனிந்து
வாடுவது கண்டேன். மரத்தருகே போய்நின்று,
"பேடே, திரவியமே, பேரின்பப் பாட்டுடையாய்,
ஏழுலகு மின்பத்தீ ஏற்றுந் திறனுடையாய்,
பீழையுனக் கெய்தியதென்? பேசாய்" எனக்கேட்டேன்.
மாயக் குயிலதுதான் மானுடவர் பேச்சினிலோர்
மாயச் சொல் கூற மனந்தீயுற நின்றேன்,
"காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில்
சாதலை வேண்டித் தவிக்கின்றேன்" என்றதுவால்.
வானத்துப் புள்ளெல்லா மையலுறப் பாடுகிறாய்,
ஞானத்திற் புட்களிலும் நன்கு சிறந்துள்ளாய்,
காதலர் நீயெய்துகிலாக் காரணந்தான்யா" தென்றேன்.
வேதனையு நாணு மிகுந்த குரலினிலே
கானக் குயிலிக் கதை சொல்ல லாயிற்று:—

"மானக் குலைவும் வருத்தமுநான் பார்க்காமல்,
உண்மை முழுதும் உரைத்திடுவேன், மேற்குலத்தீர்!
பெண்மைக்கிரங்கிப் பிழைபொறுத்தல் கேட்கின்றேன்.
அறிவும் வடிவுங் குறுகி, அவனியிலே
சிறியதொரு புள்ளாய்ச் சிறியேன் பிறந்திடினும்,
தேவர் கருணையிலோ தெய்வச் சினத்தாலோ,
யாவர் மொழியும் எளிதுணரும் பேறு பெற்றேன்;
மானுடவர் நெஞ்ச வழக்கெல்லாந் தேர்ந்திட்டேன்;
கானப் பறவை கலகலெனு மோசையிலும்,
காற்று மரங்களிடைக் காட்டு மிசைகளிலும்,
ஆற்றுநீ ரோசை அருவி யொலியினிலும்,
நீலப் பெருங்கடலெந் நேரமுமே தானிசைக்கும்
ஓலத் திடையே யுதிக்கு மிசையினிலும்,
மானுடப் பெண்கள் வளருமொரு காதலினால்
ஊனுருகப் பாடுவதி லூறிடுந் தேன் வாரியிலும்,
ஏற்றநீர்ப் பாட்டி னிசையினிலும், நெல்லிடிக்குங்
கோற்றொடியார் குக்குவெனக் கொஞ்சு மொலியினிலும்,
சுண்ணமிடிப் பார்தஞ் சுவைமிகுந்த பண்களிலும்,
பண்ணை மடவார் பழகுபல பாட்டினிலும்,
வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள் தா மொலிக்கக்
கொட்டி யிசைத்திடுமோர் கூட்டமுதப் பாட்டினிலும்,
வேயின் குழலோடு வீணைமுதலா மனிதர்
வாயினிலுங் கையாலும் வாசிக்கும் பல்கருவி [லிக்கும்
நாட்டினிலுங் காட்டினிலும் நாளெல்லாம் நன்றொ-

பாட்டினிலும், நெஞ்சைப் பறிகொடுத்தேன் பாவியேன்
நாவுமொழிய நடுக்கமுறும் வார்த்தைகளைப்
பாவிமனந் தானிறுகப் பற்றிநிற்ப தென்னேயோ?
நெஞ்சத்தே தைக்க நெடு நோக்கு நோக்கிடுவீர்.
மஞ்சரே, என்றன் மனநிகழ்ச்சி காணீரோ?
காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லையெனில்
சாதலை வேண்டித் தவிக்கின்றேன் என்றதுவே.
சின்னக் குயிலிதனைச் செப்பியவப் போழ்தினிலே,
என்னைப் புதியதோர் இன்பச் சுரங் கவர,
உள்ளத் திடையு முயிரிடையு மாங்கந்தப்
பிள்ளைக் குயிலினதோர் பேச்சன்றி வேறற்றேன்;
'காதலோ காதலினிக் காதல் கிடைத்திலதேல்
சாதலோ சாத'லெனச் சாற்றுமொரு பல்லவியென்
உள்ளமாம் வீணைதனில், உள்ள வீடத்தனையும்
விள்ள ஒலிப்பதலால் வேறோ ரொலியில்லை.
சித்த மயங்கித் திகைப்பொடுநா னின்றிடவும்,
அத்தருணத் தேபறவை யத்தனையுந் தாந்திரும்பிச்
சோலைக் கிளையிலெலாந் தோன்றி யொலித்தனவால்.
நீலக் குயிலும் நெடி துயிர்த்தாங் கிஃதுரைக்கும்:
"காதல் வழிதான் கரடுமுர டாமென்பர்.
சோதித் திருவிழியீர்! துன்பக் கடலினிலே
நல்லுறுதி கொண்டதோர் நாவாய்போல் வந்திட்டீர்

அல்லலற நும்மோ டளவளாய் நான்பெறுமிவ்
வின்பத் தினுக்கும் இடையூறு மூண்டதுவே!
அன்பொடு நீரிங்கே அடுத்த நான்காநாளில்
வந்தருளல் வேண்டும். மறவாதீர், மேற்குலத்தீர்!
சிந்தை பறிகொண்டு செல்கின்றீர்! வாரீரேல்,
ஆவி தரியேன். அறிந்திடுவீர். நான்கா நாள்.
பாவியிந்த நான்குநாள் பத்துயுகமாக் கழிப்பேன்;
சென்று வருவீர், என் சிந்தையொடு போகின்றீர்,
சென்று வருவீர்'' எனத் தேருப் பெருந்துயரங்
கொண்டு சிறுகுயிலுங் கூறி மறைந்ததுகாண்.

4

காதலோ காதல்

கண்டதொரு காட்சி கனவு நனவென்றறியேன்,
எண்ணுதலுஞ் செய்யேன், இருபது பேய்க் கொண்ட
கண்ணு முகமுங் களியேறிக் காமனார் [வன்போல்
அம்பு நுனிக ளகத்தே யமிழ்ந்திருக்க,
கொம்புக் குயிலுருவங் கோடி பல கோடியாய்
ஒன்றே யதுவாய் உலகமெலாந் தோற்றமுற,
சென்றே மனைபோந்து சித்தந் தனதின்றி
நாளொன்று போவதற்கு நான் பட்ட பாடனைத்தும்
தாளம் படுமோ? தறி படுமோ? யார் ப்டுவார்?
நாளொன்று போயினது. நானு மெனதுயிரும்,
நீளச்சிலை கொண்டு நின்றதொரு மன்மதனும்,
மாயக் குயிலுமதன் மாமாயத் தீம்பாட்டும்,
சாயைபோ லிந்தரமா சாலம் போல் வையமுமா
மிஞ்சி நின்றோம், ஆங்கு. மறு நாள் விடிந்தவுடன்
(வஞ்சனை நான் கூறவில்லை) மன்மதனார் விந்தையால்,
புத்தி மனஞ் சித்தம் புலனென் றறியாமல்,

வித்தைசெயுஞ்சூத்திரத்தின் மேவுமொருபொம்மையென,
காலிரண்டுங் கொண்டு கடுகவுநான் சோலையிலே
நீலிதனைக் காண வந்தேன். நீண்ட வழியினிலே
நின்றபொருள் கண்ட நினைவில்லை. சோலையிடைச்
சென்றுநான் பார்க்கையிலே, செஞ்ஞாயிற்றொண்கதிரால்
பச்சைமர மெல்லாம் பளபளென, என்னுளத்தின்
இச்சை யுணர்ந்தனபோல் ஈண்டும் பறவையெலாம்
வேறெங்கோ போயிருப்ப, வெம்மைக் கொடுங்காதல்
மீற வெனைத் தான்புரிந்த விந்தைச் சிறுகுயிலைக்
காணநான் வேண்டிக் கரைகடந்த வேட்கையுடன்
கோண மெலாஞ் சுற்றிமரக் கொம்பையெலா நோக்கி
வந்தேன்.

5

குயிலும் குரங்கும்

மற்றைநாட் கண்ட மரத்தே குயிலில்லை,
சுற்றுமுற்றும் பார்த்துத் துடித்து வருகையிலே,—
வஞ்சனையே! பெண்மையே! மன்மதனும் பொய்த்தேவே!
நெஞ்சகமே! தொல்விதியி னீதியே! பாழுலகே!—
கண்ணாலேநான் கண்ட காட்சிதனை என்னுரைப்பேன்!
பெண்ணா லறிவிழக்கும் பித்தரெலாங் கேண்மினோ!
காதலினைப் போற்றுங் கவிஞரெலாங் கேண்மினோ!
மாதரெலாங் கேண்மினோ! வல்விதியே கேளாய் நீ!
மாயக் குயிலோர் மரக் கிளையில் வீற்றிருந்தே
பாயும் விழிநீர் பதைக்குஞ் சிறியவுடல்
விம்மிப் பரிந்து சொலும் வெந்துயர்ச்சொல் கொண்-
டதுவாய்,
அம்மவோ! மற்றங்கோ ராண்குரங்கு தன்னுடனே
ஏதேதோ கூறி இரங்கும் நிலைகண்டேன்.
தீதேது? நன்றேது? செய்கைத் தெளிவேது?
அந்தக் கணமே அதையுங் குரங்கினையும்

சிந்தக் கருதி உடைவாளிற் கைசேர்த்தேன்.
கொன்றுவிடு முன்னே, குயிலுரைக்கும் வார்த்தைகளை
நின்று சற்றே கேட்பதற்கென் நெஞ்சம் விரும்பிடவும்,
ஆங்கவற்றின் கண்ணில் அகப்படா வாறருகே
ஓங்கு மரத்தின்பால் ஒளிந்துநின்று கேட்கையிலே,
பேடைக் குயிலிதனைப் பேசியது:—

"வானரரே

ஈடறியா மேன்மையழ கேய்ந்தவரே, பெண்மைதான்
எப்பிறப்புக் கொண்டாலும், ஏந்தலே, நின்னழகைத்
தப்புமோ? மையல் தடுக்குந் தரமாமோ?
மண்ணிலுயிர்க் கெல்லாந் தலைவரென மானிடரே
எண்ணிநின்றார் தம்மை; எனிலொருகால், ஊர்வகுத்தல்
கோயில், அரசு, குடிவகுப்புப் போன்ற சில
வாயிலிலே, அந்த மனித ருயர்வெனலாம்.
மேனி யழகினிலும், விண்டுரைக்கும் வார்த்தையிலும்,
கூனி யிருக்கும் கொலுநேர்த்தி தன்னிலுமே,
வானரர்தஞ் சாதிக்கு மாந்தர்நிக ராவாரோ?
ஆன வரையு மவர்முயன்று பார்த்தாலும்,
பட்டுமயிர் மூடப் படாத தமதுடலை
எட்டுடையால் மூடி எதிருமக்கு வந்தாலும்,
மீசையையும் தாடியையும் விந்தைசெய்து வானரர்தம்
ஆசை முகத்தினைப்போ லாக்க முயன்றிடினும்

ஆடிக் குதிக்கும் அழகிலுமை நேர்வதற்கே
கூடிக் குடித்துக் குதித்தாலும், கோபுரத்தில்
ஏறத் தெரியாமல் ஏணிவைத்துச் சென்றாலும்,
வேறெத்தைச் செய்தாலும், வேகமுறப் பாய்வதிலே
வானரர் போலாவரோ? வாலுக்குப் போவதெங்கே?
ஈனமுறுங் கச்சை இதற்கு நிகராமோ?
பாகையிலே வாலிருக்கப் பார்த்ததுண்டு, கந்தைபோல்;
வேகமுறத் தாவுகையில் வீசி எழுவதற்கே
தெய்வங் கொடுத்த திருவாலைப் போலாமோ?
சைவ சுத்தபோசனமும், சாதுரியப் பார்வைகளும்—
வானரர் போற்சாதி யொன்று மண்ணுலகின் மீதுளதோ?
வானரர் தம்முள்ளே மணிபோ லுமையடைந்தேன்.
பிச்சைப் பறவைப் பிறப்பிலே தோன்றிடினும்,
நிச்சயமா முன்புரிந்த நேமத் தவங்களினல்
தேவரீர் காதல்பெறுஞ் சீர்த்தி கொண்டேன். தம்மிடத்தே
ஆவலிறுற் பாடுகின்றேன். ஆரியரே, கேட்டருள்வீர்."
(வானரப் பேச்சினிலே மைக்குயிலி பேசியதை
யானறிந்து கொண்டுவிட்டேன், யாதோ ஒரு திறத்தால்)
நீசக் குயிலும் நெருப்புச் சுவைக்குரலில்
ஆசை ததும்பி அமுதூறப் பாடியதே:—

காதல், காதல், காதல்;
காதல் போயிற் காதல் போயிற்
சாதல், சாதல், சாதல்.

முதலியன (3-ஆம் பக்கம் பார்க்க குயிற்பாட்டு)

காட்டில் விலங்கறியும், கைக் குழந்தை தானறியும்,
பாட்டின் சுவையதனைப் பாம்பறியு மென்றுரைப்பார்.
வற்றற் குரங்கு மதிமயங்கிக் கள்ளினிலே
முற்றும் வெறிபோல் முழுவெறிகொண் டாங்ஙனே
தாவிக் குதிப்பதுவுந் தாளங்கள் போடுவதும்,
"ஆவி யுருகுதடீ, ஆஹாஹா!" என்பதுவும்,
கண்ணைச் சிமிட்டுவதும், காலாலுங் கையாலும்
மண்ணைப் பிறாண்டியெங்கும் வாரியிறைப்பதுவும்,
"ஆசைக் குயிலே! அரும் பொருளே! தெய்வதமே!
பேச முடியாப் பெருங்காதல் கொண்டுவிட்டேன்,
காதலில்லை யானாற் கணத்திலே சாதலென்றாய்;
காதலினாற் சாகுங் கதியினிலே என்னை வைத்தாய்,
எப்பொழுது நின்னை இனிப்பிரிவ தாற்றுகிலேன்,
இப்பொழுதே நின்னை முத்த மிட்டுக் களியுறுவேன்"
என்று பல பேசுவது மென்னுயிரைப் புண்செயவே,
கொன்றுவிட எண்ணிக் குரங்கின்மேல் வீசினேன்
கைவாளை யாங்கே; கனவோ நனவுகொலோ?
தெய்வ வலியோ? சிறு குரங்கென் வாளுக்குத்
தப்பி, முகஞ்சுளித்துத் தாவி யொளித்திடவும்,
ஒப்பிலா மாயத் தொருகுயிலுந் தான்மறைய,
சோலைப் பறவை தொகைதொகையாத் தாமொலிக்க,
மேலைச் செயலறியா வெள்ளறிவிற் பேதையேன்
தட்டித் தடுமாறிச் சார்பனைத்துந் தேடியுமே
குட்டிப் பிசாசக் குயிலையெங்கும் காணவில்லை.

6

இருளும் ஒளியும்

வான நடுவிலே மாட்சியுற ஞாயிறுதான்
மோனவொளி சூழ்ந்திடவு மொய்ம்பிற் கொலுவிருந்தான்.
மெய் யெல்லாஞ் சோர்வு விழியில் மயக்கமுற,
உய்யும் வழியுணரா துள்ளம் பதைபதைக்க,
நாணுந் துயரும் நலிவுறுத்த, நான் மீண்டு
பேணுமனை வந்தேன்; பிரக்கினைபோய் வீழ்ந்துவிட்டேன்,
மாலையிலே மூர்ச்சைநிலை மாறித் தெளிவடைந்தேன்;
"நாலு புறமுமெனை நண்பர் வந்து சூழ்ந்து நின்றார்.
"ஏனடா மூர்ச்சையுற்றாய்? எங்கு சென்றாய், ஏது செய்தாய்?
வானம் வெளிறுமுன்னே வைகறையி லேதனித்துச்
சென்றனை என்கின்றாரச் செய்தி என்னே? ஊணின்றி
நின்றதென்னே?" என்று நெரித்துவிட்டார் கேள்விகளை.
இன்னார்க் கிதுசொல்வ தென்று தெரியாமல்,
"என்னாற் பலவுரைத்த லிப்பொழுது கூடாதாம்.
நாளை வருவீரேல் நடந்ததெலாஞ் சொல்வேன். இவ்
வேளை எனைத் தனியே விட்டகல்வீர்" என்றுரைத்தேன்.

நண்பரெல்லாஞ் சென்றுவிட்டார். நைந்து நின்ற
தாயார்தாம்
உண்பதற்குப் பண்டமுதவி நல்ல பால்கொணர்ந்தார்.
சற்று விடாய் தீர்ந்து தனியே படுத்திருந்தேன்;
முற்று மறந்து முழுத்துயிலி லாழ்ந்து விட்டேன்.
பண்டு நடந்ததனைப் பாடுகின்ற இப்பொழுதும்,
மண்டு துயரெனது மார்பையெலாங் கவ்வுவதே.
ஓடித் தவறி உடைவனவாஞ் சொற்களெலாம்;
கூடி மதியிற் குவிந்திடுமாஞ் செய்தியெலாம்.
நாசக் கதையை நடுவே நிறுத்திவிட்டுப்
பேசு மிடைப்பொருளின் பின்னே மதிபோக்கிக்
கற்பனையும் வர்ணனையுங் காட்டிக் கதை வளர்க்கும்
விற்பனர் தஞ் செய்கை விதமுந் தெரிகிலன்யான்.
மேலைக் கதையுரைக்க வெள்கிக் குலையுமனம்.
காலைக் கதிரழகின் சற்பனைகள் பாடுகிறேன்.
தங்கமுருக்கித் தழல்குறைத்துத் தேனாக்கி
எங்கும் பரப்பியதோ ரிங்கிதமோ? வான்வெளியைச்
சோதி கவர்ந்து சுடர்மயமாம் விந்தையினை
ஓதிப் புகழ்வார் உவமையொன்று காண்பாரோ?

கண்ணையினி தென்றுரைப்பர்; கண்ணுக்குக் கண்ணுகி
விண்ணை அளக்குமொளி மேம்படுமோ ரின்பமன்றே?
மூலத் தனிப்பொருளை மோனத்தே சிந்தை செய்யும்
மேலவரு மஃதோர் விரியுமொளி யென்பாரேல்,
நல்லொளிக்கு வேறுபொருள் ஞாலமிசை யொப்-
புல்லை நகையுறுத்திப் பூவை வியப்பாக்கி, [புளதோ?
மண்ணைத் தெளிவாக்கி, நீரில் மலர்ச்சி தந்து
விண்ணை வெளியாக்கி, விந்தைசெயுஞ் சோதியினைக்
காலைப்பொழுதினிலே கண்விழித்து நான் தொழுதேன்.
நாலு புறத்துமுயிர் நாதங்க ளோங்கிடவும்,
இன்பக் களியி லியங்கும் புவிகண்டேன்.
துன்பக் கதையின் தொடருரைப்பேன், கேளீரோ!

7

குயிலும் மாடும்

காலைத் துயிலெழுந்து, காலிரண்டும் முன்போலே
சோலைக் கிழுத்திட, நான் சொந்தவுணர் வில்லாமே
சோலையினில் வந்துநின்று, சுற்றுமுற்றுந் தேடினேன்.
கோலப் பறைவைகளின் கூட்டமெல்லாங் காணவில்லை.
மூலையிலோர் மாமரத்தின் மோட்டுக் கிளையினிலே
நீலக் குயிலிருந்து நீண்டகதை சொல்லுவதும்,
கீழே யிருந்தோர் கிழக்காளை மாடதனை
ஆழ மதியுடனே ஆவலுறக் கேட்பதுவும்,
கண்டேன்,!வெ குண்டேன், கலக்கமுற்றேன்; நெஞ்சிலனல்
கொண்டேன், குமைந்தேன், குமுறினேன், மெய்
வெயர்த்தேன்;
கொல்லவாள் வீசல் குறித்தேன். "இப்பொய்ப் பறவை
சொல்லுமொழி கேட்டதன்பின் கொல்லுதலே
சூழ்ச்சி"யென;

முன்போல் மறைந்து நின்றேன்; மோகப் பழங் கதையைப்
பொன்போற் குரலும் புதுமின் போல் வார்த்தைகளுங்
கொண்டு, குயிலாங்கே கூறுவதாம்:-

"நந்தியே,

பெண்டிர் மனத்தைப் பிடித்திழுக்கும் காந்தமே,
காமனே மாடாகக் காட்சி தரு மூர்த்தியே,
பூமியிலே மாடுபோற் பொற்புடைய சாதியுண்டோ?
மானிடருந் தம்முள் வலிமிகுந்த மைந்தர்தமை
மேனியுறுங் காளையென்று மேம்பா டுறப் புகழ்வார்.
காளையர்த முள்ளே கனமிகுந்தீர், ஆரியரே!
நீளமுகமும், நிமிர்ந்திருக்குங் கொம்புகளும்,
பஞ்சுப் பொதிபோற் படர்ந்த திருவடிவும்,
மிஞ்சு புறச்சுமையும், வீரத் திருவாலும்,
வானத் திடிபோல 'மா'வென் றுறுமுவதும்,
ஈனப் பறவை முதுகின்மிசை ஏறிவிட்டால்
வாலைக் குழைத்து வளைத்தடிக்கும் நேர்மையும், பல்
காலம் நான் கண்டு கடுமோக மெய்திவிட்டேன்.
பார வடிவும் பயிலு முடல்வலியும்
தீர நடையும் சிறப்புமே இல்லாத
சல்லித் துளிப்பறவைச் சாதியிலே நான் பிறந்தேன்.
அல்லும் பகலு நித மற்ப வயிற்றினுக்கே

காடெல்லாஞ் சுற்றிவந்து, காற்றிலே எற்றுண்டு,
மூட மனிதர் முடைவயிற்றுக் கோருணவாம்
சின்னக் குயிலின் சிறுகுலத்திலே தோன்றி
என்னபயன் பெற்றேன்? எனைப்போலோர் பாவி
யுண்டோ?
சேற்றிலே தாமரையும் சீழுடைய மின்வயிற்றிற்
போற்றுமொளி முத்தும் புறப்படுதல் கேட்டிலிரோ?
நீசப் பிறப்பொருவர் நெஞ்சிலே தோன்றிவரும்
ஆசை தடுக்கவல்ல தாகுமோ? காமனுக்கே
சாதி பிறப்புத் தராதரங்கள் தோன்றிடுமோ?
வாதித்துப் பேச்சை வளர்த்தோர் பயனுமில்லை.
மூட மதியாலோ, முன்னைத் தவத்தாலோ,
ஆடவர்த முள்ளே அடியாளுமைத் தெரிந்தேன்.
மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்
கூனர்தமை ஊர்களிலே கொண்டு விடுவதற்கும்
தெய்வமென நீருதவி செய்தபின்னர், மேனிவிடாய்
எய்தி யிருக்கு மிடையினிலே, பாவியேன்
வந்துமது காதில் மதுரவிசை பாடுவேன்;
வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்,
வாலிலடி பட்டு மனமகிழ்வேன், 'மா' வென்றே
ஒலிடுநும் பேரொலியோ டொன்றுபடக் கத்துவேன்
மேனியிலே உண்ணிகளை மேவாது கொன்றிடுவேன்.

கானிடையே சுற்றிக் கழனியெலா மேய்ந்து, நீர்
மிக்கவுண வுண்டுவாய் மென்றசைதான் போடுகையில்
பக்கத்திருந்து பல கதைகள் சொல்லிடுவேன்.
காளை யெருதரே, காட்டிலுயர் வீரரே,
தாளைச் சரணடைந்தேன், தையலெனைக் காத்தருள்வீர்.
காதலுற்று வாடுகின்றேன். காதலுற்ற செய்தியினை
மாத ருரைத்தல் வழக்கமில்லை என்றறிவேன்.
ஆனாலு மென்போ லபூருவமாங் காதல்கொண்டால்,
தானா வுரைத்தலன்றிச் சாரும் வழியுளதோ ?
ஒத்த குலத்தவர்பால் உண்டாகும் வெட்கமெலாம்
இத்தரையில் மேலோர்முன் ஏழையர்க்கு நாண
முண்டோ ?
தேவர் முன்னே அன்புரைக்கச் சிந்தை வெட்கங்
கொள்வதுண்டோ ?
காவலர்க்குத் தங்குறைகள் காட்டாரோ கீழடியார் ?
ஆசைதான் வெட்க மறியுமோ ?" என்றுபல
நேசவுரை கூறி நெடிதுயிர்த்துப் பொய்க்குயிலி
பண்டுபோ லேதனது பாழடைந்த பொய்ப் பாட்டை
எண்டிசையு மின்பக் களியேறப் பாடியதே.

காதல், காதல், காதல்,
காதல் போயிற் காதல் போயிற்,
சாதல், சாதல், சாதல்.

முதலியன (11-ஆம் பக்கம் பார்க்க)

பாட்டு முடியும்வரை பாரறியேன், விண்ணறியேன்;
கோட்டுப் பெருமரங்கள் கூடிநின்ற காவறியேன்!
தன்னை யறியேன், தனைப்போ லெருதறியேன்;
பொன்னை நிகர்த்தகுரல் பொங்கிவரு மின்பமொன்றே
கண்டேன். படைப்புக் கடவுளே, நான்முகனே,
பண்டேயுலகு படைத்தனை நீ என்கின்றார்.
நீரைப் படைத்து நிலத்தைத் திரட்டிவைத்தாய்
நீரைப் பழைய நெருப்பிற் குளிர்வித்தாய்,
காற்றை முன்னே ஊதினாய். காணரிய வானவெளி
தோற்றுவித்தாய், நின்றன் தொழில் வலிமையாரறிவார்?
உள்ளந்தான் கவ்வ வொருசிறிதுங் கூடாத
கொள்ளைப் பெரியவுருக் கொண்ட பலகோடி
வட்ட வுருளைகள் போல் வானத்தி லண்டங்கள்
எட்ட நிரப்பி யவை எப்போதும் ஓட்டுகின்றாய்;
எல்லா மசைவில் இருப்பதற்கே சத்திகளை
பொல்லாப் பிரமா, புகுத்து விட்டாய், அம்மாவோ!
காலம் படைத்தாய், கடப்பதிலாத் திக்கமைத்தாய்;
ஞாலம் பலவினிலும் நாடோறுந் தாம்பிறந்து

தோன்றி மறையுந் தொடர்பாப் பலவனந்தஞ்
சான்ற வுயிர்கள் சமைத்துவிட்டாய் நான்முகனே
சாலமிகப் பெரிய சாதனைகா ணிஃதெல்லாம்!
தாலமிசை நின்றன் சமர்த்துரைக்க வல்லார் யார்?
ஆனாலும் நின்றன் அதிசயங்கள் யாவினுமே,
கானமுதம் படைத்த காட்சிமிக விந்தையடா!
காட்டு நெடு வானங் கடலெல்லாம் விந்தையெனில்,
பாட்டினைப்போ லாச்சரியம் பாரின்மிசை இல்லையடா!
பூதங்க ளொத்துப் புதுமைதரல் விந்தையெனில்,
நாதங்கள் சேரும் நயத்தினுக்கு நேராமோ?
ஆசைதருங் கோடி யதிசயங்கள் கண்டதிலே,
ஓசைதரு மின்பம் உவமையிலா வின்பமன்றோ?
செத்தைக் குயில் புரிந்த தெய்வீகத்தீம் பாட்டெனு
வித்தை முடிந்தவுடன், மீட்டுமறி வெய்தினான் [மோர்
கையில் வாளெடுத்துக் காளையின்மேல் வீசினேன்.
மெய்யிற் படுமுன் விரைந்ததுதான் ஓடிவிட,
வன்னக் குயில் மறைய, மற்றைப் பறவையெலாம்
முன்னைப்போற் கொம்பு முனைகளிலே வந்தொலிக்க,
நாணமிலாக் காதல்கொண்ட நானுஞ் சிறுகுயிலை
வீணிலே தேடியபின், வீடுவந்து சேர்ந்துவிட்டேன்.
எண்ணியெண்ணிப் பார்த்தேன் எதுவும் விளங்கவில்லை;

—கண்ணிலே நீர்ததும்பக் கானக் குயிலெனக்கே
காதற் கதையுரைத்து நெஞ்சங் கரைத்ததையும்,
பேதைநா னங்கு பெரியமயல் கொண்டதையும்,
இன்பக் கதையி னிடையே தடையாகப்
புன்பறவை யெல்லாம் புகுந்த வியப்பினையும்,
ஒன்றைப் பொருள் செய்யா வுள்ளத்தைக் காமவனல்
தின்றெனது சித்தந் திகைப்புறவே செய்ததையும்,
சொற்றைக் குரங்கும் தொழுமாடும் வந்தெனக்கு
முற்றும் வயிரிகளா மூண்ட கொடுமையையும்,
இத்தனை கோலத்தினுக்கும் யான்வேட்கை தீராமல்
பித்தம் பிடித்த பெரிய கொடுமையையும்—
எண்ணியெண்ணிப் பார்த்தேன், எதுவும் விளங்கவில்லை;
கண்ணிரண்டும் மூடக் கடுந்துயிலி லாழ்ந்துவிட்டேன்.

8

நான்காம் நாள்

நான்காநாள். என்னை நயவஞ்சனை புரிந்து
வான்காதல் காட்டி மயக்கிச் சதிசெய்த [நாள்
பொய்மைக் குயிலென்னைப் போந்திடவே கூறிய-
மெய்ம்மை யறிவிழந்தேன். வீட்டிலே மாடமிசை
சித்தத் திகைப்புற்ருேர் செய்கை யறியாமல்,
எத்துக் குயிலென்னை எய்துவித்த தாழ்ச்சியெலாம்
மீட்டும் நினைந்தங்கு வீற்றிருக்கும் போழ்தினிலே,
காட்டுத் திசையினிலென் கண்ணிரண்டும் நாடியவால்
வானத்தே ஆங்கோர் கரும்பறவை வந்திடவும்
யானதனைக்கண்டே, 'இது நமது பொய்க்குயிலோ?'
என்று திகைத்தேன்; இருந்தொலைக்கே நின்றதனுல்
நன்று வடிவந் துலங்கவில்லை; நாடுமனம்
ஆங்கதனை விட்டுப் பிரிவதற்கு மாகவில்லை.
ஓங்குந் திகைப்பி லுயர்மாடம் விட்டுநான்
வீதியிலே வந்து நின்றேன். மேற்றிசையி லவ்வுருவம்
சோதிக் கடலிலே தோன்று கரும் புள்ளியெனக்
காணுதலும், சற்றே கடுகி யருகேபோய்,
'நாணமிலாப் பொய்க்குயிலோ' என்பதனை நன்கறிவோம்

என்ற கருத்துடனே யான்விரைந்து சென்றிடுங்கால்,
நின்ற பறவையுந்தான் நேராகப் போயினதால்.
யானின்ருல் தானிற்கும், யான்சென்ருல் தான் செல்லும்;
மேனி நன்கு தோன்ற அருகினிலே மேவாது;
வானி லதுதான் வழிகாட்டிச் சென்றிடவும்,
யானிலத்தே சென்றேன். இறுதியிலே முன்புநாம்
கூறியுள்ள மாஞ்சோலை தன்னைக் குறுகியந்த
ஊறிலாப் புள்ளுமத னுள்ளே மறைந்ததுவால்.
மாஞ்சோலைக் குள்ளே மதியிலிநான் சென்ருங்கே,
ஆஞ்சோதி வெள்ளம் அலையுமொரு கொம்பரின்மேல்
சின்னக் கருங்குயிலி செவ்வனே வீற்றிருந்து,
பொன்னங் குழலின் புதிய ஒலிதனிலே
பண்டைப் பொய்க்காதற்பழம்பாட்டைத்தான்பாடிக்
கொண்டிருத்தல் கண்டேன், குமைந்தேன்; எதிரே—
"நீசக் குயிலே, நிலையறியாப் பொய்மையே, [போய்,
ஆசைக் குரங்கினையும் அன்பா ரெருதினையும்
எண்ணிநீ பாடும் இழிந்த புலைப்பாட்டை
நண்ணியிங்கு கேட்க நடத்திவந்தாய் போலுமெனை"
என்று சினம்பெருகி ஏதேதோ சொல்லுரைத்தேன்.
கொன்றுவிட நெஞ்சிற் குறித்தேன்; மறுபடியும்
நெஞ்ச மிளகி நிறுத்திவிட்டேன். ஈங்கிதற்குள்,
வஞ்சக் குயிலி மனத்தை இரும்பாக்கிக்

கண்ணிலே பொய்ந் நீர் கடகடெனத் தானூற்றப்
பண்ணிசைபோ லின்குரலாற் பாவியது கூறிடுமால்:
ஐயனே, என்னுயிரின் ஆசையே, ஏழையெனை
வையமிசை வைக்கத் திருவுளமோ? மற்றெனையே
கொன்று விடச் சித்தமோ? கூறீரொரு மொழியில்!
அன்றிற் சிறுபறவை ஆண்பிரிய வாழாது, [வுளதோ?
ஞாயிறுதான் வெம்மைசெயில், நாண்மலர்க்கு வாழ்-
தாயிருந்து கொன்றால், சரண்மதலைக் கொன்றுளதோ?
தேவர் சினந்துவிட்டால், சிற்றுயிர்க ளென்னாகும்?
ஆவற் பொருளே, அரசே, என் னாரியரே,
சிந்தையினீரென்மேற் சினங்கொண்டால் மாய்ந்திடுவேன்;
வெந்தழலில் வீழ்வேன், விலங்குகளின் வாய்ப்படுவேன்.
குற்றநீ ரென்மேற் கொணர்ந்ததனை யானறிவேன்.
குற்றநுமைக் கூறுகிலேன், குற்றமிலேன் யானம்ம!
புன்மைக் குரங்கைப் பொதிமாட்டை நான்கண்டு
மென்மையுறக் காதல் விளையாடினே னென்றீர்;
என் சொல்கேன்! எங்ஙனுய்வேன்! ஏதுசெய்கேன்!
நின்சொல் மறுக்க நெறியில்லை; ஆயிடினும் [ஐயனே,
என்மேற் பிழையில்லை; யாரிதனை நம்பிடுவார்?—
நின்மேற் சுமைமுழுதும் நேராகப் போட்டுவிட்டேன்,
வெவ்விதியே! நீ என்னை மேம்பாடுறச் செய்து [திடினும்,
செவ்விதினிங் கென்னை என்றன் வேந்தனொடு சேர்த்

அல்லாதென் வார்த்தை யவர்சிறிதும் நம்பாமே
புல்லாக எண்ணிப் புறக்கணித்துப் போய்விட, நான்
அக்கணத்தே தீயில் அழிந்துவிழ நேரிடினும்,
எக்கதிக்கும் ஆளாவேன்; என்செய்கேன்? வெவ்விதியே !

★ ★ ★

★

9

குயில் தனது பூர்வஜன்மக் கதையுரைத்தல்

'தேவனே ! என்னருமைச் செல்வமே ! என்னுயிரே !
போவதன் முன்னென்று புகல்வதனைக் கேட்டருள்வீர் !
முன்ன மொருநாள் முடிநீள் பொதியமலை
தன்னருகே நானுந் தனியேயோர் சோலைதனில்
மாங்கிளையி லேதோ மனதிலெண்ணி வீற்றிருந்தேன்.
ஆங்குவந்தா ரோர்முனிவர். ஆரோ பெரியரென்று
பாதத்தில் வீழ்ந்து பரவினேன் ; ஐயரெனை
ஆதரித்து வாழ்த்தி யருளினார். மற்றதன்பின்,
'வேத முனிவரே, மேதினியிற் கீழ்ப்பறவைச்
சாதியிலே நான் பிறந்தேன். சாதிக்குயில்களைப்போல்
இல்லாமல், என்றன் இயற்கை பிரிவாகி,
எல்லார் மொழியும் எனக்கு விளங்குவதேன்?
மானுடர்போற் சித்தநிலை வாய்ந்திருக்குஞ் செய்தி யேன் ?
யானுணரச் சொல்வீர்' என வணங்கிக் கேட்கையிலே,
கூறுகின்றார் ஐயர்:

'குயிலே, கேள், முற்பிறப்பில்

வீறுடைய வெந்தொழிலார் வேடர் குலத்தலைவன்
வீர முருகனெனும் வேடன் மகளாகச்

சேர வளநாட்டில் தென்புறத்தே ஓர் மலையில்
வந்து பிறந்து வளர்ந்தாய் நீ. நல்லிளமை
மூந்து மழகினிலே மூன்று தமிழ் நாட்டில்
யாரும் நினக்கோர் இணையில்லை என்றிடவே
சீருயர நின்றாய்; செழுங்கான வேடரிலுன்
மாமன் மகனொருவன், மாடனெனும் பேர்கொண்டான்,
காமன் கணைக்கிரையாய், நின்னழகைக் கண்டுருகி,
நின்னை மணக்க நெடுநாள் விரும்பி, அவன்
பொன்னை மலரைப் புதுத்தேனைக் கொண்டுனக்கு
நித்தங் கொடுத்து, நினைவெல்லாம் நீயாகச்
சித்தம் வருந்துகையில், தேமொழியே, நீயவனை
மாலையிட வாக்களித்தாய்; மையலினாலில்லை; அவன்
சால வருந்தல் சகிக்காமற் சொல்லிவிட்டாய்;
ஆயிடையே, நின்றன் அழகின் பெருங்கீர்த்தி
தேயமெங்குந் தான்பரவத் தேன்மலையின் சார்பினிலோர்
வேடர்கோன், செல்வமுநல் வீரமுமே தானுடையான்;
நாடனைத்து மஞ்சி நடுங்குஞ் செயலுடையான்,
மொட்டைப் புலியனுந்தன் மூத்த மகனான
நெட்டைக் குரங்கனுக்கு நேரான பெண்வேண்டி,
நின்னை மணம்புரிய நிச்சயித்து, நின்னப்பன்
தன்னை யணுகி, "நின்னோர் தையலையென் பிள்ளைக்குக்
கண்ணாலஞ் செய்யுங் கருத்துடையேன்" என்றிடலும்,

எண்ணைப் பெருமகிழ்ச்சி எய்தியே, நின் தந்தை
ஆங்கே உடம்பட்டான்; ஆறிரண்டு நாட்களிலே
பாங்கா மணம்புரியத் தாமுறுதி பண்ணிவிட்டார்.
பன்னிரண்டு நாட்களிலே பாவையுனைத் தேன்மலையில்
அன்னியன் கொண்டேகிடுவான் என்னும் அதுகேட்டு,
மாடன் மனம்புகைந்து மற்றைநாள் உன்னைவந்து
நாடிச் சினத்துடனே நானு மொழி கூற,
நீயு மவனிடத்தே நீண்ட கருணையினால்,
"காயுஞ் சினந்தவிர்ப்பாய், மாடா, கடுமையினால்
நெட்டைக் குரங்கனுக்குப் பெண்டாக நேர்ந்தாலும்,
கட்டுப் படி அவர்தங் காவலிற் போய் வாழ்ந்தாலும்
மாதமொரு மூன்றில் மருமஞ் சிலசெய்து
பேதம் விளைவித்துப் பின்னிங்கே வந்திடுவேன்;
தாலிதனை மீட்டுமவர் தங்களிட மேகொடுத்து
நாலிரண்டு மாதத்தே நாயகனா நின்றனையே
பெற்றிடுவேன்; நின்னிடத்தே பேச்சுத் தவறுவனோ?
மற்றிதனை நம்பிடுவாய், மாடப்பா" என்றுரைத்தாய்;
காதலினாலில்லை; கருணையினா லிஃதுரைத்தாய்.
(மாதரசாய், வேடன் மகளான முற்பிறப்பில்,
சின்னக் குயிலியென்று செப்பிடுவார் நின் நாமம்.)
பின்னர்ச் சிலதினங்கள் சென்றதன்பின், பெண்குயிலி,
நின்னொத்த தோழியரும் நீயுமொரு மாலையிலே

மின்னற் கொடிகள் விளையாடுதல் போலே
காட்டி னிடையே களித்தாடி நிற்கையிலே,
வேட்டைக் கென வந்தான் வெல்வேந்தன் சேரமான்
தன்னருமை மைந்தன். தனியே, துணைபிரிந்து,
மன்னவன் றன்மைந்த னொருமானைத் தொடர்ந்துவரத்
தோழியரும் நீயுந் தொகுத்துநின்றே ஆடுவதை
வாழியவன் கண்டுவிட்டான். மையல் கரை கடந்து
நின்னைத் தனதாக்க நிச்சயித்தான். மாது நீ
மன்னவனைக் கண்டவுடன் மாமோகங் கொண்டுவிட்டாய்.
நின்னை யவன் நோக்கினான்; நீயவனை நோக்கி நின்றாய்;
அன்னதொரு நோக்கினிலே ஆவி கலந்துவிட்டீர்.
தோழியரும் வேந்தன் சுடர்க்கோலந் தான்கண்டே
ஆழி யரச னரும்புதல்வன் போலு மென்றே
அஞ்சி மறைந்து விட்டார். ஆங்கவனும் நின்னிடத்தே,
"வஞ்சித் தலைவன் மகன் யான்" எனவுரைத்து,
"வேடர் தவமகளே, விந்தை யழகுடையாய்,
ஆடவனாத் தோன்றி யதன்பயனை இன்று பெற்றேன்;
கண்டதுமே நின்மிசைநான் காதல்கொண்டேன்;
என்றிசைக்க.
மண்டு பெருங்காதல் மனத்தடக்கி நீ மொழிவாய்;
"ஐயனே. உங்க ளரமனையில் ஐந்நூறு
தையல ருண்டாம்; அழகில் தன்னிகரில் லாதவராம்
கல்வி தெரிந்தவராம்; கல்லுருகப் பாடுவராம்;

அன்னவரைச் சேர்ந்தே நீர் அன்புடனே வாழ்ந்திருப்பீர்;
மன்னவரை வேண்டேன் மலைக்குறவர் தம்மகள்யான்;
கொல்லு மடற் சிங்கம் குழிமுயலை வேட்பதுண்டோ?
வெல்லுதிறல் மாவேந்தர் வேடருள்ளோ பெண்
ணெடுப்பார்?
பத்தினியா வாழ்வதல்லால் பார்வேந்தர் தாமெனினும்
நத்தி விலைமகளா நாங்கள் குடி போவதில்லை,
பொன்னடியைப் போற்றுகின்றேன், போய் வருவீர்,
தோழியரும்
என்னை விட்டுப்போயினரே. என்செய்கேன்?'' என்று நீ
நெஞ்சங் கலக்கமெய்தி நிற்கையிலே, வேந்தன் மகன்
மிஞ்சுநின்றன் காதல் விழிக்குறிப்பி னலறிந்தே,
பக்கத்தில் வந்து பளிச்சென் றுனது கன்னஞ்
செக்கச் சிவக்க முத்தமிட்டான். சினங்காட்டி
நீ விலகிச் சென்ருய்—நெறியேது காமியர்க்கே?—
தாவி நின்னைவந்து தழுவினன் மாற்பிறுக.
“நின்னையன்றி ஓர்பெண் நிலத்திலுண்டோ என்றனுக்கே?
பொன்னே, ஒளிர்மணியே, புத்தமுதே, இன்பமே,
நீயே மனையாட்டி, நீயே அரசாணி,
நீயே துணை எனக்கு, நீயே குலதெய்வம்.
நின்னையன்றிப் பெண்ணை நினைப்பேனே? வீணிலே
என்னை நீ ஐயுறுதல் ஏதுக்காம்? இப்பொழுதே [பால்
நின் மனைக்குச் சென்றிடுவோம்; நின்வீட்டிலுள்ளோர்—

என்மனத்தைச் சொல்வேன், எனதுநிலை யுரைப்பேன்,
வேத நெறியில் விவாகமுனைச் செய்து கொள்வேன்,
மாதரசே" என்று வலக்கைதட்டி வாக்களித்தான்.
பூரிப்புக் கொண்டாய், புளகம்நீ எய்திவிட்டாய்.
வாரிப் பெருந்திரைபோல் வந்த மகிழ்ச்சியிலே
நாணந் தவிர்த்தாய்; நனவே தவிர்ந்தவளாய்,
காணத் தெவிட்டாதோ ரின்பக் கனவினிலே
சேர்ந்துவிட்டாய். மன்னவன்றன் திண்டோளை நீயுவகை
ஆர்ந்து தழுவி அவனிதழில் தேன்பருகச்
சிந்தை கொண்டாய். வேந்தன் மகன், தேனில் விழும்
வண்டினைப்போல்.
விந்தையுறு காந்தமிசை வீழு மிரும்பினைப்போல்,
ஆவலுடனின்னை யறத்தழுவி, ஆங்குனது
கோவையிதழ்பருகிக் கொண்டிருக்கும் வேளையிலே,—
சற்றுமுன்னே ஊரினின்று தான்வந் திறங்கியவன்,
மற்றுநீ வீட்டைவிட்டு மாதருடன் காட்டினிலே
கூத்தினுக்குச் சென்றதனைக் கேட்டுக் குதூகலமாய்
ஆத்திரந்தான் மிஞ்சி நின்னை ஆங்கெய்திக் காணவந்
தோன்,—
நெட்டைக்குரங்கன் நெருங்கி வந்து பார்த்துவிட்டான்.
"பட்டப் பகலிலே! பாவிமகள் செய்தியைப் பார்!
கண்ணாலங் கூட இன்னுங் கட்டி முடியவில்லை.

மண்ணுக்கிவிட்டாள்! என் மானந்தொலைத்து விட்டாள்!
'நிச்சிய தாம்பூலம்' நிலையா நடந்திருக்கப்
பிச்சைச் சிறுக்கி செய்த பேதகத்தைப் பார்த்தாயோ!'
என்று மனதில் எழுகின்ற தீயுடனே
நின்று கலங்கினான் நெட்டைக் குரங்கனங்கே.

மாப்பிளைதான் ஊருக்கு வந்ததையும், பெண்குயிலி
தோப்பிலே தானுந்தன் தோழிகளு மாச்சென்று
பாடி விளையாடும் பண்பு கேட்டே குரங்கன்
ஓடி யிருப்பதோ ருண்மையையும் மாடனிடம்
யாரோ உரைத்துவிட்டார்: ஈரிரண்டு பாய்ச்சலிலே
நீரோடும் மேனி நெருப்போடுங் கண்ணுடனே
மாடனங்கு வந்துநின்றான். மற்றிதனைத் தேன்மலையின்
வேடர்கோன் மைந்தன் விழிகொண்டு பார்க்கவில்லை.
நெட்டைக் குரங்கனங்கு நீண்ட மரம்போல
எட்டிநிற்குஞ் செய்தி இவன் பார்க்க நேரமில்லை.
அன்னியனைப் பெண்குயிலி ஆர்ந்திருக்குஞ் செய்தியொன்று
தன்னையே இவ்விருவர் தாங்கண்டார், வேறறியார்.

மாடனதைத் தான்கண்டான், மற்றவனு மங்ஙனமே,
மாடன் வெறி கொண்டான், மற்றவனு மவ்வாறே.
காவலன்றன் மைந்தனுமக் கன்னிகையுந் தானுமங்கு
தேவ சுகங் கொண்டு விழியே திறக்கவில்லை.

ஆவிக் கலப்பி னமுத சுகந்தனிலே
மேவியங்கு மூடி யிருந்த முழி நான்கு.
ஆங்கவற்றைக் கண்டமையால் ஆவியிலே தீப்பற்றி
ஓங்கும் பொறிக ளுதிர்க்கும் விழிநான்கு.
மாடனுந்தன் வாளுருவி மன்னவனைக் கொன்றிடவே
ஓடிவந்தான்; நெட்டைக் குரங்கனும் வா ளோங்கி
வந்தான்;
வெட்டிரண்டு வீழ்ந்தனகாண் வேந்தன் முதுகினிலே.
சட்டெனவே மன்னவனுந் தான் திரும்பி வாளுருவி
வீச்சிரண்டி லாங்கவரை வீழ்த்தினான்; வீழ்ந்தவர் தாம்
பேச்சிழந்தே யங்கு பிணமாக் கிடந்துவிட்டார்.
மன்னவனுஞ் சோர்வெய்தி மண்மேல்விழுந்து விட்டான்.
பின்னவனை நீயும் பெருந்துயர்கொண்டே மடியில்
வாரி யெடுத்துவைத்து வாய்புலம்பக் கண்ணிரண்டும்
மாரி பொழிய மனமழிந்து நிற்கையிலே,
கண்ணை விழித்துனது காவலனுங் கூறுகின்றான்;
"பெண்ணே, இனி நான் பிழைத்திடேன்; சில்கணத்தே
ஆவி துறப்பேன். அழுதோர் பயனில்லை.
சாவிலே துன்பமில்லை; தையலே, இன்னமும் நாம்
பூமியிலே தோன்றிடுவோம். பொன்னே, நினைக்கண்டு
காமுறுவேன்; நின்னைக் கலந்தினிது வாழ்ந்திடுவேன்;

இன்னும் பிறவியுண்டு. மாதரசே, இன்பமுண்டு.
நின்னுடனே வாழ்வனினி நேரும் பிறப்பினிலே"
என்று சொல்லிக் கண் மூடி, இன்பமுறு புன்னகைதான்
நின்று முகத்தே நிலவுதர, மாண்டனன்காண்
மாடனிங்கு செய்ததோர் மாயத்தால் இப்பொழுது
பீடையுறு புள்வடிவம் பேதையுனக் கெய்தியது.
வாழிநின்றன் மன்னவனுந் தொண்டை வளநாட்டில்
ஆழிக் கரையி னருகேயோர் பட்டினத்தில்
மானிடனுத் தோன்றி வளருகின்ருன். நின்னையொரு
கானிடத்தே காண்பான். கனிந்துநீ பாடுநல்ல
பாட்டினைத்தான் கேட்பான். பழவினையின் கட்டினுல்
மீட்டு நின்மேற் காதல்கொள்வான், மென்குயிலே'

என்றந்தத்

தென்பொதியை மாமுனிவர் செப்பினுர். 'சாமீ,
குயிலுருவங்கொண்டேன்யான், கோமானே மேன்மை
பயிலு மனிதவுருப் பற்றிநின்ருன், எம்முள்ளே
காதலிசைந் தாலுங் கடிமணந்தான் கூடாதாம்.
சாதற் பொழுதிலே தார்வேந்தன் கூறியசொல்
பொய்யாய் முடியாதோ?'என்றிசைத்தேன்.புன்னகையில்
ஐய ருரைப்பார்:—' அடி பேதாய், இப்பிறவி
தன்னிலும் நீ விந்தகிரிச் சார்பினிலோர் வேடனுக்குக்

கன்னியெனத் தான் பிறந்தாய். கர்மவசத்தினுல்,
மாடன் குரங்க னிருவருமே வன்பேயாக்
காடுமலே சுற்றி வருகையிலே கண்டுகொண்டார்
நின்னேயங்கே. இப்பிறப்பில் நீயும் பழமைபோல்
மன்னனேயேசேர்வையென்று தாஞ்சூழ்ந்து மற்றவரும்
நின்னேக் குயிலாக்கி நீ செல்லுங் திக்கி லெலாம்
நின்னுடனே சுற்றுகின்ருர். நீயிதனேத் தேர்கிலேயோ?"
என்ருர். 'விதியே! இறந்தவர்தாம் வாழ்வாரை
நின்று துயருறுத்தல் நீதியோ? பேய்களேனேப்
பேதைப் படுத்திப் பிறப்பை மறப்புறுத்தி
வாதைப் படுத்தி வருமாயில், யானெனது
காதலனேக் காணுங்கால், காய்ச்சினத்தா லேதேனுங்
தீதிழைத்தா லென்செய்வேன்? தேவரே, மற்றிதற்கோர்
மாற்றிலேயோ? என்று மறுகி நான் கேட்கையிலே,
தேற்றமுறு மாமுனிவர் செப்புகின்ருர்:—'பெண் குயிலே
தொண்டைவளநாட்டிலோர் சோலேயிலே வேந்தன் மகன்
கண்டுனது பாட்டிற் கருத்திளகிக் காதல்கொண்டு
நேசம் மிகுதியுற்று நிற்கையிலே, பேயிரண்டும்
மோசம் மிகுந்த முழுமாயச் செய்கை பல
செய்துபல பொய்த்தோற்றங் காட்டித் திறல் வேந்தன்
ஐயமுறச் செய்துவிடும், ஆங்கவனும் நின்றனேயே

வஞ்சகியென் றெண்ணி மதிமருண்டு நின்மீது
வெஞ்சினந்தா னெய்திநினை விட்டுவிட நிச்சயிப்பான்.
பிந்தி விளைவதெல்லாம் பின்னேநீ கண்டு கொள்வாய்.
சந்தி ஜபம் செய்யுஞ் சமயமாய் விட்ட' தென்றே
காற்றில் மறைந்து சென்றார் மாமுனிவர். காதலரே,
மாற்றியுரைக்கவில்லை. மாமுனிவர் சொன்னதெல்லாம்
அப்படியே சொல்லிவிட்டேன். ஐயோ! திருவுளத்தில்
எப்படி நீர் கொள்வீரோ? யானறியேன். ஆரியரே,
காத லருள்புரிவீர். காதலில்லை என்றிடிலோ,
சாத லருளித் தமது கையாற் கொன்றிடுவீர்!''
என்று குயிலு மெனதுகையில் வீழ்ந்ததுகாண். [ருல்
கொன்றுவிட மனந்தான் கொள்ளுமோ? பெண்ணென்
பேயு மிரங்காதோ? பேய்க ளிரக்கமின்றி
மாயமிழைத் தாலதனை மானிடனுங் கொள்ளுவதோ?
காதலிலே ஐயங் கலந்தாலும் நிற்பதுண்டோ?
மாதரன்பு கூறில் மனமிளகா ரிங்குளரோ?
அன்புடனே யானும் அருங்குயிலைக் கைக்கொண்டு
முன்புவைத்து நோக்கியபின் மூண்டுவரு மின்பவெறி
கொண்டதனை முத்தமிட்டேன். கோகிலத்தைக்
காணவில்லை.
விண்டுரைக்க மாட்டாத விந்தையடா! விந்தையடா!
ஆசைக் கடலின் அமுதடா! அற்புதத்தின்

தேசமடா! பெண்மைதான் தெய்விகமாங்காட்சியடா!
பெண்ணொருத்தி அங்குநின்றாள்; பேருவகை கொண்டு
தான்
கண்ணெடுக்கா தென்னைக்கணப் பொழுதுநோக்கினாள்;
சற்றே தலை குனிந்தாள். சாமி! இவளழகை
எற்றே தமிழி லிசைத்திடுவேன்? கண்ணிரண்டும்
ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனோ?
மீள விழியில் மிதந்த கவிதையெலாம்
சொல்லி லகப்படுமோ? தூயசுடர் முகத்தையொப்பாம்
பல்லிற் கனியிதழிற் பாய்ந்த நிலவினை யான்
என்றும் மறத்தல் இயலுமோ? பாரின் மிசை
நின்றதொரு மின்கொடிபோல் நேர்ந்த மணிப் பெண்
ணரசின்
மேனி நலத்தினையும் வெட்டினையுங் கட்டினையும்
தேனி லினியாள் திருத்த நிலையினையும்
மற்றவர்க்குச் சொல்ல வசமாமோ? ஓர் வார்த்தை
கற்றவர்க்குச் சொல்வேன். கவிதைக் கனிபிழிந்த
சாற்றினிலே, பண் கூத்தெனுமிவற்றின் சாரமெலாம்
ஏற்றி, அதனோடே இன்னமுதைத் தான் கலந்து,
காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்
மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்.
பெண்ணவளைக் கண்டு பெருங்களிகொண் டாங்ஙனே

நண்ணித் தழுவி நறுங்கள் ளிதழினையே
முத்தமிட்டு முத்தமிட்டு மோகப் பெருமயக்கில்
சித்த மயங்கிச் சிலபோழ் திருந்த பின்னே,
பக்கத் திருந்தமணிப் பாவையுடன் சோலையெலாம்
ஒக்க மறைந்திடலும், ஓஹோ! எனக்கதறி
வீழ்ந்தேன். பிறகு விழிதிறந்து பார்க்கையிலே
சூழ்ந்திருக்கும் பண்டைச் சுவடி, எழுதுகோல்,
பத்திரிகைக் கூட்டம், பழம்பாய்—வரிசையெல்லாம்
ஒத்திருக்க 'நாம் வீட்டில் உள்ளோம்' எனவுணர்ந்தேன்.
சோலை, குயில், காதல், சொன்னகதை யத்தனையும்,
மாலை யழகின் மயக்கத்தால் உள்ளத்தே
தோன்றியதோர் கற்பனையின் சூழ்ச்சியென்றே
கண்டுகொண்டேன்.

ஆன்ற தமிழ்ப் புலவீர், கற்பனையே யானாலும்,
வேதாந்த மாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?

அச்சிட்டோர்:
தமிழ்நாடு பிரஸ்,
4, கீழபட்டமார்தெரு, மதுரை.

7e
2/
5/10
20A
144-86